உ



யாழ் அரியாலையை பூர்வீகமாகக் கொண்ட

அமரர்

# தம்பிப்பிள்ளை மகாதேவா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "நினைவு மலர்"

29.09.2019

# சமர்ப்பணம்

எங்கள் வாழ்வின் ஒளி விளக்காய்
எங்கள் குடும்ப குலதெய்வமாய்
எங்கள் உயர்வையே தன் இலட்சியமாகக் கொண்டு
தன் கஷ்டங்கள் யாவையும் மறந்து
எமக்காகவே வாழ்ந்த
அன்புத்தெய்வம்
**அமரர் தம்பிப்பிள்ளை மகாதேவா**
அன்புக்கு அணிகலனாய் பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய் சுமைதாங்கியாய் வாழ்ந்து
இன்றும் அணையாத் தீபமாய் சுடர் வீசும் எம்
அன்புத் தெய்வத்தின்
இனிய நினைவுகளை, எங்களின் உதிரங்களில்
சுமந்தவண்ணம்,
சீர்பதி யாழ்நகர் அரியாலையூர் ஸ்ரீ சித்திவிநாயகர்
அருள்கொண்டு மகாமாரி அம்மன் ஆசியுடன்
இவ் மலரை உங்கள்
பாதக் கமலத்தில் அர்ப்பணித்துக்
காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

716, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் இல்ல தலைவரின் மறைவுச் செய்தி
கேட்டு எமது இல்லத்துக்கு வந்து ஆறுதல்
கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம்
தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கும்,
பல வழிகளிலும் உதவி புரிந்த உறவினர்கள்,
அயலவர்கள், மற்றும் வெளிநாட்டில் வாழும்
சொந்தங்களுக்கும், மரணச் சடங்கில்
பங்குபற்றியோர்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக்
கிரியை நடாத்திய அந்தணர்களுக்கும் எமது
அழைப்பை ஏற்று கிருத்திய நிகழ்வில்
பங்குபற்றிய அனைவருக்கும் எமது
இதயம் கனிந்த நன்றிகளை
தெரிவித்துக் கொள்கிறோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மாற்கு"

*- குடும்பத்தினர் -*



உ

சிவமயம்



அமரர்

# தம்பிப்பிள்ளை மகாதேவா

**அன்னை மடியில்**
**28-06-1939**

**இறைவன் திருவடியில்**
**31-08-2019**

திதி வெண்பா

ஆண்டு விகாரி ஆன. தமிழ் ஆவணி
சனிக்கிழமை பூர்வபக்க பிரதமை திதி
மதியம் இல்லறம் கண்ட மகாதேவா
உனை காலன் அழைத்ததே அன்று...

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

சலம்பூ வொடுதூ பமறந்தறியேன்
தமிழோ டிசைபா டல் மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன்னை மறந் தறியேன்
உன்னா மம் என்னா வில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லை தவிர்த் தருளாய்
அலந்தேனடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

## திருவாசகம்

அன்றேயென்றென் ஆவியும் உடலும்
உடமை யெல்லாமும்
குன்றே யனையாம் என்னை யாட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றொளரிடையூறு
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல் வண்ணற் கருளிப்
பொன்னெடுங் சிவிகை யாவூர்ந்த
மேக நாயகனை மிரு திரு விழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடியார்கள் விரைந்து வமிமின்
ஆகோண்டுங் கொடுத்துங் குடிகுடியீசர்க்
காட செய்மின் குழாம் புகுந்த
தண்டங்கடந்த பொருளை வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் குமிபடப் பெற்று
மண்ணிலே வந்த இப்பிறவியிலே எனக்கு
வலிதான் இன்பமாம் என்ற
கண்ணிலானந்த அருவி நீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

சோடிழந்த அன்றினைப் போல் துயரமானேன்
தோகை மணில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானேன்
காடுகளில் இனம் பிரிந்த கல களானேன்
கருங் கடலிற் காற்றடிக்கும் கப்பலானேன்
ஓடுகின்ற பாய் மரத்தினல் காகமானேன்
உள்ளார் ஒருவரில்லாப் பித்தனானேன்
பாடுபட நானறியேன் பழனி வேலா
பச்சை மயில் மீது வந்து இரட்சிப்பாயே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## பிறப்பு

பிறப்பு வாழ்வில் ஒருமுறைதான்-மேலும்
இறப்பு வாழ்வில் ஒருமுறைதான் இருப்பது
நாமே எதுவரையில்- இதை எவரும் அறியார்
இதுவரையில் சிறப்பு பெறநாம் வாழ்ந்தோமா - என
சிந்தனை தன்னில் ஆழ்ந்தோமா வெறுப்பா
மற்றவர் நமைநோக்க - பெரும்வேதனை
வந்து நமைதாக்க எண்ணிப் பாரீர் மனிதர்களாய்
பல் இதயம் வாழ்த்த புனிதர்களாய்
மண்ணில் வாழ்ந்த காலத்தே-பிறர்
மனதில் திகழ ஞானத்தே
கண்ணிய முடனே வாழ்ந்தோமா-நம்
கடமை அதுவென ஆய்ந்தோமா
பண்ணிய பாவம் ஏதுமிலை-எனில்
பயப்பட வாழ்வில் எதுவுமிலை
மரணம் நம்மைத் தேடிவர-கேட்ட
மக்கள் அனைவரும் ஓடிவர
வரமே பெற்றோம் நாமென்றே...

# அமரர் தம்பிப்பிள்ளை மகாதேவா அவர்களின் வாழ்க்கை சுருக்கம்

அமரர் தம்பிப்பிள்ளைசின்னம்மா தம்பதிகளின் புத்திரராக 1939ம் ஆண்டு அரியாலையில் பிறந்தார். அவருடைய தம்பியான இந்திர லிங்கத்துடன் இளமை காலத்தை இனிதே பயணித்தார். தன்னுடைய ஆரம்பக் கல்வியை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும் உயர் தரத்தினை யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் பயின்றார் இளமைக் காலத்தில் இருந்தே சுறுசுறுப்பாகவும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவராக திகழ்ந்த இவர் யாழ்ப்பாணம் தபால் காரியாலயத்தில் இணைந்து தனது தொழில் கடமையை ஆரம்பித்தார் அத்தோடு சமத்துவ கொள்கைகளிலும் பற்றுள்ளவராக திகழ்ந்தார்.

அவருடைய தகப்பனார் ஆகிய தம்பிப்பிள்ளை அக்காலத்தில் சங்கக் கடை மேனேஜராக இருந்த வேளையில் அவருடைய சினேகிதரான மற்றுமோர் சங்கக் கடை மேனேஜராக இருந்த சின்னத்துரை என்பவரின் இரண்டாவது மகளான புஸ்பராணி என்பவரை இருவீட்டு பெற்றோரின் விருப்பத்திற்கு அமைய 27ஆவது வயதில் 1968 ஆம் ஆண்டு திருமண பந்தத்தில் இணைந்தார்.

அவரது இல்லற வாழ்க்கையில் பாமா, நகுலராஜ், அகிலராஜ், வசந்தராஜ், மற்றும் மகிந்தராஜ் ஆகிய ஒரு பெண் குழந்தையும் நான்கு ஆண் குழந்தைகளையும், பெற்று தன் செல்வங்களை நற்பிரஜைகளாக உருவாக்கினார்.

மகாதேவா அவர்கள் உரிய காலத்தில் ஓய்வு பெற்று சமூகப் பணியாக அரியாலை சரஸ்வதி நூல்நிலைய காப்பாளராகவும் ஒரு சில சமூக பணிகளிலும் தன் வாழ்க்கையை மிகவும் நேர்மையாகவும், ஊர்களில் இருக்கும் பொது அமைப்புகளில் உறுப்பினராகவும் திகழ்ந்த மகாதேவா தனது வயோதிப காலத்தில் தன் மனைவியும் வீடும் என்ற அடிப்படையில் அமைதியாக வாழ்க்கையை தொடர்ந்தார்.

அத்தோடு மூத்த மகளாகிய பாமா வை உள்ளூரில் தகுந்த வரனுக்கு திருமணம் செய்து வைத்தார் ஆண் பிள்ளைகள் நாட்டில் ஏற்பட்ட இடர் நிமித்தம் முன்பே வெளிநாடு செல்லல் ஆயிற்று. தொடர்ந்து நகுலராஜ், அகிலராஜ் ஆகியோருக்கான திருமணம் இனிதே நிறைவுற்றன. அத்தோடு வசந்தராஜ் என்ற மூன்றாவது மகன்

இளப்பினால் துயர் அடைந்த மகாதேவா அவர்கள் இறுதி கிரிகைகளிலும் வெளிநாடு சென்று பங்கெடுத்தார். எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்தவர் அப்பா என்றால் மிகையாகாது. தனது இளைய மகனுடன் மிக அன்னியோன்யமாக உறவை தொடர்ந்த வண்ணம் இங்கு இருக்கையில் திடீர் சுகவீனம் உற்ற மகாதேவா அவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் தகுந்த வைத்திய மேற்பார்வையில் 18 நாட்கள் மேலோங்கியிருந்த சுகநிலை, திடீரென்று உடல்நிலை குறைவு ஏற்பட்டு தனது அன்பு மனைவியின் கரம் கோர்த்து சற்றும் எதிர்பாராமல் 80வது வயதிலில் இயற்கை எய்தினார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக..

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஊருஞ்சதமல்ல உற்றார் சதமல்ல ஊற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்தாள் சதங்கச்சி ஏகாம்பனே

## “மகள் சொல்லும் அப்பா”

நான் எழுதும் தமிழ் கவிதையில் நான் கண்ட மிக சிறந்த மூன்று எழுத்து என் “அப்பா”

எனக்கு முன்பே பூமியில் பிறந்து, என்னை காக்க வேண்டி அவரின் மகளாக பெற்று எடுத்து, என்னை கண்ணில் வைத்து தாங்கிய இறைவன் என் செல்ல “அப்பா”.

நம்மிடம் அடுத்தவர் காட்டும் நேசம் கண்டிப்பாக எதையோ எதிர்பார்த்தே நிற்கும், ஆனால் சற்றும் சுயநல நோக்கம் இல்லாமல் எப்போதும் நம் நலனை விரும்பும் நலன் விரும்பி என் அன்பு “அப்பா”.

பெத்த கடன் ஒன்றிற்காக தன் வாழ்கை சந்தோசங்களை துச்சமாக நினைத்து மகள் வாழ்க்கையை சீரமைத்து ஒரு நல்ல நிலைக்கு என்னைக் கொண்டு செல்ல பாடுபட்ட இறைவன் என் “அப்பா”.

# அன்பு சகோதரன் இந்திரலிங்கத்தின் இனிய நினைவுகள்...

எனது எண்ணங்களில் பூத்திருந்த நினைவுகளில் சிலவற்றில் ஓர் சமர்ப்பணம்.. அமரர் மகாதேவா அவர்கள் முற்போக்கு சிந்தனையுடன் வாழ்ந்தவர் என்பது பலருக்கு தெரியாது சமதர்மம் சோசலிசம் போன்ற குறிக்கோளுக்கு உரிய சொற்றொடர்கள் பலருக்கு அதிகமாக தெரியாத 1960 ஆம் ஆண்டளவில் அண்ணன் அத்தகைய கொள்கைகளை பிரச்சாரம் செய்யும் முயற்சிகளில் அப்போது பங்குபற்றியவர். அவருடைய நண்பர்களான பாலசுப்பிரமணியம், சண்முகம், குணரத்தினம், போன்றவர்களுடன் அண்ணன் முற்போக்கு இடதுசாரி சிந்தனைகளை மக்களிடையே வளர்க்க முயன்றது மட்டுமல்லாமல் எளிமையான வாழ்க்கையை பின்பற்றினார்.

எனது உயர்தர கல்விக்காக யாழ் கனகரத்தினம் வித்தியாலயத்தில் இருந்து யாழ் இந்துக் கல்லூரிக்கு மாற்றுவதற்கு அவர் எடுத்த முயற்சி முதன்மையானது. அப்போது இந்துக் கல்லூரியின் முக்கியஸ்தரான கார்த்திகேயன் மாஸ்டர், ஆசிரியர் சோமசுந்தரம், செட்டியார், போன்றவர்கள் அண்ணர் மீது எவ்வளவு மரியாதை வைத்திருந்தார்கள் என்று எனக்கு இப்போதும் ஞாபகம் உள்ளது.

அண்ணனுடைய எளிமையான வாழ்க்கையும், பண்புகளும், உலகளாவிய சிந்தனை தான், அவருக்கு ஊருக்கு வெளியிலான மதிப்பை சம்பாதித்தது. 1970இல் ஓர் இடதுசாரி புத்தகசாலை ஆரியகுள வீதிக்கு அருகாமையில் இருந்தபோது நான் ஓர் எழுத்தாளராக, சென்ற வேளை அந்த புத்தகசாலை நடத்தியவர்கள், மகாதேவாவின் தம்பியார் என்ற கண்ணோட்டத்தில் என் எழுத்துக்களுக்கு, இல்லாத மதிப்பை தந்ததை நான் இவ்வேளையில் நினைவு கூற வேண்டும்.

கடந்த 38 ஆண்டுகளாக நாங்கள் இரு கண்டங்களில் வாழ்ந்த போதிலும் எமக்கு இடையிலான பாச இணைப்பு எப்போதும் இணைந்தே இருந்தது ஒரு நண்பர் போல் இருவருமாக ராணி தியேட்டரில் படம் பார்ப்பது மலேயன் கபேயில் உணவு அருந்துவது என இன்றும் பல நினைவுகள் எனது மனதில் திரளாக திரளுகின்றது.

2011ஆம் ஆண்டு நானும் எனது மகளும் கொழும்பை வந்தடைந்த போது அண்ணனையும் அண்ணியையும் சந்திப்பதற்காக வருகை தந்து சந்திக்க சென்ற இடத்தில் நான் அங்கும் இங்கும் தேடிய நேரத்தில் முதலில் அடையாளம் கண்டுகொண்டது எனது மகள், இதனை எப்படி அடையாளம் கொண்டாய் என்று கேட்டதற்கு உங்கள் முகசாயலில் அவரை பார்த்த போது நான் கண்டு கொண்டதாக சொன்னது என்னை மிளிர வைத்தது.

அண்ணனின் ஆரம்ப வாழ்க்கை கடினமாக இருந்தபோதும் இன்றைய அளவில் பூரணமான வாழ்க்கை அன்பான மனைவி, பிள்ளைகள், அன்பான சகோதரர், மருமகன், மருமகள்கள், அத்தோடு நீண்டகால நோயற்ற வாழ்வு திருப்திகரமாக நிறைவேறியது.

நாம் கண்ணீர் விட்டாலும் ஒரு முறையாக வாழ்க்கையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் நல்லதையும் கெட்டதையும் சமமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறது பகவத் கீதை என்பதை நினைவுபடுத்தி, இறுதி வரையிலும் கூட எனது சுக நலனை தொலைபேசி வாயிலாக கேட்கும் அளவுக்கு தனது உடல் நலத்தை மறந்து பேசிய சொற்றொடர்கள் என் மனதில் என்றும் அகலாது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருனை யுடைத்திவ் வுலகு"

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## அன்னாரின் பிள்ளைகளின் பெருந்துயர்...

மக்களாய் எமைஈன்று மகிழ் வெல்லாம் தந்தீர்கள்., எமக்கு மகாதேவா மக்கள்ளென்றோ சுகம் காண்போம்... வாழ்வில் தப்பேதும் செய்தாலும் தட்டிக் கேட்டு சரி பிழை சொன்னீரே.. அன்பிற்றகே அடிமையாய் ஆக்கியெமை வளர்த்தீர்கள். அவனியில் வாழ்ந்து பண்புடமை காத்து பக்குவமாய் வழி நடத்தினீர்கள் அப்பா முகம் காண ஆவலுடன் நாமிருந்தோம் தப்பான கணக்கென்றோ காலன் கணக்கிட்டான் எப்போது வருவீர்கள் எம்மிடத்தில் தந்தையே அப்போதே கண்ணீர்த்துளியோடு காத்திருக்கக் காத்திருப்போம். எம் இதயம் என்றும் உங்கள் ஆத்மா சாந்திக்காக பிராத்தனை செய்வோம்.

## To Our Beloved Grandpa

We'll always remember that special smile, caring heart,
warm embrace, you always gave us. You being there
for Grandma and us through good and bad times,
no matter what. Your blessings and care made our lives
possible.
Grandpa, we've always admired your independence
and inspired by your coolest way of tackling situations.
In our minds we always knew this time would come to pass.
But knowing it and living it, has come and gone so fast.
Goodbyes are often hard to say, they hurt so very much.
Though you're not gone, you still remain
in the minds, hearts, and lives you've touched.
We'll always remember you Grandpa because
there'll never be another one to replace you in our hearts,
and the love we will always have for you.

*With Love,*
*Dharsha, Vithusha, Deyaasha*

## For my grandfather

There's a special kind of love that grandchildren
have for their grandparents.
It is filled with gratitude for the values,
they have given us with delight in the stories of our
family that they remember and share.
It's a special kind of love that's built on a lifetime of
caring and giving.
Your life was a blessing, your memory was a
treasure.
You are loved beyond the words and missed
beyond measure.

*Love,*
*Apyraa, Nethra*

# "மரணம்"

கடவுள் சித்தம், உயிர் விலகல் உடலுக்கு வலி இல்லாத நிகழ்வாக இருக்க வேண்டும். எப்படி மரத்தில் இருந்து காய்ந்த இலை விழுகிறதோஅது போல இருக்கவேண்டும். காய்ந்த இலை விழும்போது மரமும் வலி அறியாது, இலையும் வலி அறியாது.... மெல்ல,மெல்ல மெதுவாய் காற்றிலே அசைந்தாடி.........மரண காயம் இல்லாமல்...!!!! மனித மரணம் மதிப்புடையதாக இருக்க வேண்டும். மனிதராய் பிறந்த அனைவருக்கும் மரணம் என்பது நிச்சயக்கப்பட்ட ஒன்று, அந்த மரணம் எப்படி இருக்கவேண்டும்

1) குடும்பத்திற்க்கு ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றிய பின் வரும் மரணம்.

2) வாங்கிய ஓய்வூதியத்தை மருத்துவமனைகளுக்கு செலவிடாமல் வரும் மரணம்.

3) நோய்வாய்பட்டு உடல் வருந்தி, கவனிக்க ஆள் அரவம் இன்றி இல்லாமல் வரும் மரணம்.

4) விபத்துக்கள், கொலைகள், தற்கொலை, போன்றவற்றின் மூலம் இல்லாமல் வரும் மரணம்.

5) இயற்க்கையாய் தூக்கத்தில் வலி அறியாது வரும் மரணம்.

6) நோய், நொடி இன்றி வரும் மரணம்.

7) பழி பாவம் இன்றி வரும் மரணம்.

8) எழுபது வயதுக்கு மேல் 80வயதுக்குள் நிகழும் இயற்கை மரணம்.

9) தான, தர்மத்திற்க்கு பின் வரும் மரணம்.

10) இவர் போல யார் என்று ஊர் சொல்லும் மரணம்.

11) வாழ்வது ஒரு முறை ஊருக்காக,உலகத்திற்க்காக, மனித நேயமுடன், பண்புடன், அன்புடன், பிறர் பின் பற்றும் வாழ்க்கை வழி முறையுடன் வாழ்ந்த பின் வரும் மரணம்.

'மனித மரணம் மதிப்புடையதாக இருக்க வேண்டும்'

*ஆக்கம் : தேவர்sun*

# கடைசி வரை யாரோ...!!!

"வீடு வரை உறவு,
வீதி வரை மனைவி,
காடு வரை பிள்ளை,
கடைசிவரை யாரோ"...???

உறவு என்றால் தொடர்பு கொள்வது. அல்லது இணைத்திருப்பது எனப் பொருள்படும். எவ்வளவு நாட்கள் என்றால் பதில் தெரியாது. யூகித்து வேண்டுமானால் கூறலாம். அது உண்மையாக இருக்க வாய்ப்பில்லை. அது உண்மை இல்லை என்பதால் உறவுகள் போலியானவைகள் என்று ஒரு ஞானி கூறியிருக்கிறார்.

எந்த ஒன்றும் எல்லைக்கு உட்பட்டும், கால வரையறையோடு இயங்குவது அன்பு அல்ல. உறவுக்குள் அன்பு இருந்தால் அது எப்பொதும் இருந்து கொண்டே இருந்தால் மட்டுமே அது உண்மை என்றும், அன்பு என்றும் கொள்ள முடியும் என்றறிந்த கவிஞர் ஒவ்வொரு உறவும் முடியும் இடத்தை சுட்டிக்காட்டி இருக்கிறார் கவியரசர். வீடு வரையில் மட்டும் கொள்ளும் உறவுகளில் நிம்மதி எப்படி நிலையாக இருக்க முடியும்....??? மனிதன் வாழும் இடத்திற்கு பெயர் வீடு. பறவைகளுக்கு கூடு. விலங்கினங்களுக்கு காடு. இப்படி வீடே உயிர்களுக்கு ஏற்றார்போல மாற்றம் அடையும்போது அங்கு வாழும் உறவுகளின் உணர்வுகள் மட்டும் எப்படி மாறாமல் இருக்க முடியும்.....??? கணவனை மட்டுமே நம்பி வந்த மனைவியானவள் தன உயிரோடும், உறவோடும் ஒன்றி இருந்த காலத்தில் அன்பின் வடிவாக இருக்கிறாள். ஆனால், மரணம் என்னும் மாற்றம் அவளிடம் இருக்கும் உயிரை பிறிக்கும்போது அவளால் வீதி வரை மட்டுமே உறவாட முடியும். அதுவே, ஆண் பிள்ளையாக இருப்பின் காடு வரை உறவாட முடியும். ஆனால், கடைசிவரை துணையாக வருவது எந்த உறவும் இல்லை என்பதை வேதனையுடன் விவரிக்கிறார் கவிஞர்.

வேதாத்ரியின் உறவுப் படலத்தில் உறவோடு துறவு கொண்டாட வேண்டுமென்று புதுமையான கருத்தை முன் வைத்து நம்மை தெளிவடைய வைக்கிறார். எந்த உறவாக இருந்தாலும் சொந்தம் உண்டு பந்தம் இல்லை என்ற நிலையில் வாழப் பழகிக் கொண்டால் உறவால் துன்பம் இல்லை. உறவின் பிரிவால் வேதனை இல்லை

என்று தெளிவுபட எடுத்துரைக்கிறார். கணவனோ, மனைவியோ யாரும் யாரையும் உரிமை கொண்டாடுவதற்கு அதிகாரம் இல்லை, அதிகாரம் செலுத்துவதற்கும் உரிமை இல்லை. ஒவ்வொரு உயிருக்கும் சுதந்திரம் இருக்கிறது, அறிவு இருக்கிறது, ஆற்றலும் இருக்கிறது என்று எண்ணி வாழ்ந்தால் எந்த உறவினாலும் இன்னல்கள் எழுவதற்கு வாய்ப்பில்லையே.......!!! எந்த உறவும் நம் இறுதி வரை வரப் போவதில்லை. நம்முடைய அறிவும், வாழும் காலத்தில் நாம் செய்த தர்மமும் மட்டுமே துணை இருக்கும். அதுவும் அதன் விளைவுகளை தம் சந்ததியினருக்கு பரிமாற்றப்படும் என்ற பேருண்மையை விளக்கிக் காட்டுகிறார் வேதாத்திரி மகரிஷி.

*தொகுப்பு : தேவர்sun*

## வெற்றியின் ரகசியம்

- உங்களிடமுள்ள குறைகளைக் குறைத்து நிறைகளைப் பெற எப்போதும் முயலுங்கள்.
- உங்களுக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டால் அது உங்கள் திறமைக்கு விடப்பட்ட சவால் என்று நினைத்து பிரச்சனைகளை அணுகுங்கள்.
- படிக்கப் படிக்க மனம் விரிவடையும், திறந்த மனம் வெற்றியின் விளைநிலம்.
- பள்ளம்தான் மேட்டினை நிர்ணயிக்கிறது.
  குள்ளம் தான் உயர்வினை வடிவமைக்கிறது.
  இல்லாதது தான் இருப்பதை காட்டுகிறது.
- தவறு செய்வது தவறல்ல. திருத்திக் கொள்ள மறுப்பது தவறு.
- ஒரு பக்கம் நீங்கள் கை கொடுத்தால் இன்னொரு பக்கம் உங்களுக்கு கை கொடுக்கும்.
- வெற்றி ஓர் அனுபவம் என்றால் தோல்வியும் ஓர் அனுபவமே. தோல்வி எனப்படுவது வெற்றிக் செலுத்தும் காணிக்கை அவ்வளவு தான். அதற்காக உற்சாகம் இழக்கத் தேவையில்லை.

# வியக்கத்தக்க அகத்தியர் சிந்தனை
# உயிரா உடலா முதலில்

சென்மமனிதர் தாமுஞ் சென்மிக்கும்வாறு கேளாய் இன்னமுஞ்
சுக்கிலத்தில் பிராணவாய்வதுவுஞ் சென்று தின்னமாய்
பிராணவாயுவு சென்றது கோபமுற்றி யுன்னுமாமி ரத்தஞ்சூழ்ந்து
வுதாரணவாய் வளர்க்கம் சூழ்ந்து சுக்கிலதில் சுரோணிதங்
கலக்குமென்று பூந்திடும் வியாதி மூன்றும் பொருந்திடும்
குமிழிபோல ஏந்தியே திரளுமேழிலீரேழு தன்னிலூர்க்கு மாய்ந்த
நாளிருபத்தைந்தி லருங்முளை போற்றோன்றும் -அகத்தியர்.

ஆணின் சுக்கிலத்தில் பிராணவாயு சென்றடைந்து கிளர்ச்சியுற்று உயிரணுக்கள் வளர்ச்சி அடையும். இந்த சமயத்தில் ஏற்படும் உறவினால், பெண்ணின் சுரோணியத்துடன் ஆணின் சுக்கிலம் கலந்து வாத, பித்த, கபம் என்று சொல்லப்படும் மூன்று விகற்பங்களும் அதனுடன் சேர்ந்து சிறு குமிழி போலாகி கருப்பையின் உட்சென்று தங்கி வளரத் துவங்கி, இருபத்தி ஐந்து நாளில் முளை போல தோன்றும் என்கிறார். இது உயிரற்ற ஒரு நிலை.

முந்திய திங்கள்தன்னில் கருமுளைத்தது கட்டியாகும் பிந்திய
திங்கள் தன்னிற் பிடரிதோள் முதுகுமன்றி யுதிக்கும் மூன்றாந்திங்க
ளுடல்விலா யரையுங்கால்கள் ளுந்திக்கு யுயிரும்வந்தே
யிணைந்திடுமென்றே. -அகத்தியர்.

முதல் மாதத்தின் முடிவில் உருவான இந்த முளை பின்னர் வளர்ந்து ஒரு கட்டிபோல உருவாகுமாம். இரண்டாவது மாதத்தில் பிடறி, தோள், முதுகு ஆகிய பாகங்கள் உருவாகுமாம். மூன்றாவது மாதத்தில் உடல், விலா, இடுப்பு போன்றவைகள் உருவாகும். அந்த கட்டதில் தான் கருவிற்கு உயிரும் வந்து இணையும் என்கிறார்.

ஆக,கருவானது மூன்றுமாத வளர்ச்சியின் பின்னரே உடலில் உயிர் வந்து சேருகிறது. அதன் பிறகே மற்ற அவயங்கள் வளரத்துவங்குகிறது.

இந்த தகவல்கள் எல்லாம் அறிவியல் வளராத பலநூறு வருடங்களுக்கு முன்னரே நமது முன்னோர்களால் தீர ஆராய்ந்து சொல்லப் பட்டிருக்கின்றன என்பதில்தான் இந்த தகவலின் மகத்துவமே அடங்கி இருக்கிறது.

உடற்கூறியியலில் சித்தர் பெருமக்களின் ஆழ்ந்த அறிவு இன்றைய நவீன அறிவியலின் தெளிவுகளுக்கு கொஞ்சம் குறைந்ததில்லை என்பது நாம் பெருமிதத்துடன் நினைவு கூற வேண்டிய ஒன்றாகும்.

*அலசல், தேவர்sun*

## வாழ்க்கை ஓட்டம் ....

நாம் இளைப்பாற சற்று அமரலாம் என்று நினைக்கும் போது துரத்தி வரும் வாழ்க்கையை வெல்ல மீண்டும் ஓட்டம் என வட்டமாகி போன பின்னர் மறந்துபோன பருவகால விளையாட்டுகள் எல்லாமே கானல் நீர் ஆகி விட்டது.

'ஓடி விளையாடு பாப்பா' என்ற பாரதியின் வரியை மறந்து போனோமா அல்லது கடந்து போனோமோ என்று தெரியவில்லை. இப்போ இதை படிக்கிற எத்தனை பேர் நம் குழந்தைகள் பாடசாலையின் பின் வந்ததும் விளையாட அனுப்புவதே இல்லை பாரம்பரிய விளையாட்டுகள் பற்றி சொல்லி கொடுத்து இருக்கிறோமா?

நம் குழந்தைகளுக்கு நாகரிக உலகில் விளையாடகூட நேரமில்லை. புழுதித் தெருக்களில், புரண்ட நாம்தான் இன்று குழந்தைகளை தார் ரோடுகளில் பாதம் பதியாமல் செருப்போடும், வாகனத்துடன் தான் செல்கிறோம். விலைமதிப்பிட முடியாத பண்பாட்டுப் பொக்கிசங்களை நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருக்கிறோம். ஒருகாலத்தில் கிராமத்துச் சிறுவர்களும், சிறுமிகளும் விளையாடிய விளையாட்டுக்கள் கூட சமூக அக்கறை சார்ந்ததாக இருந்தது. உழைப்பவர்களின் செல்வத்தை ஏகாதிபத்தியத்தின் வலிய கரங்கள் கவர்ந்து கொள்ளும் காரியம் காலகாலமாக நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

# இறந்தவர் திதி கணிக்கும் முறை

திதி என்ற வடமொழிச் சொல்லுக்கு தொலைவு என்று அர்த்தம். குறிப்பாக திதி என்பது வானவெளியில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே ஏற்பட்ட தூரத்தின் பெயராகும். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம். திதி பஞ்சாங்கத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

இரண்டு பட்சங்கள் :- அவை
1.கிருஷ்ண பட்சம் (அ) தேய்பிறை மற்றும்
2.சுக்கில பட்சம் (அ) வளர்பிறை ஆகும்.

அமாவாசை :- சூரியனும், சந்திரனும் ஒரே ராசியில் சேர்ந்திருப்பார்கள்.

சுக்கில பட்சம் (அ) வளர்பிறை :-அமாவாசை மறு தினத்திலிருந்து வளர்பிறை கடைசி தினத்தன்று பௌர்ணமி வரை முடிகிறது. அதன் பின் சந்திரன் சூரியனிடம் இருந்து விலகி செல்வார்.

பௌர்ணமி :- சூரியன் மற்றும் சந்திரன் சமசப்தகமாக எதிர் எதிர் ராசிகளில் அமைவது. பௌர்ணமி தினம். கிருஷ்ண பட்சம் (அ) தேய்பிறை :- பௌர்ணமி மறு தினத்திலிருந்து தேய்பிறை கடைசி தினத்தன்று அமாவாசையாகி தேய்பிறை முடிகிறது.

திதிகளின் முக்கியமான பங்கு இறந்தவர்களின் நினைவு தினமாக (சிரார்த்தம் மற்றும் திதி) செய்துவிக்கபடுகிறது.
1. பிரதமை, 2. துவிதியை, 3. திருதியை, 4. சதுர்த்தி, 5. பஞ்சமி, 6. ச'டி, 7. சப்தமி, 8. அ்'டமி, 9. நவமி, 10. தசமி, 11. ஏகாதசி, 12. துவாதசி, 13. திரயோதசி, 14. சதுர்த்தசி, 15. பவுர்ணமி (அ) அமாவாசை என்று மொத்தம் 15 திதிகள் உள்ளன.

இவை தமிழ் மாதத்தின் பெயரை சொல்லி வளர்பிறையா தேய்பிறையா என்று பஞ்சாங்கத்தின் முலம் திதி கணிக்கப்பட்டு இறந்தவர்களின் நினைவு தினமாக அனுஸ்திக்கப்படுகிறது.

# வியாழ மாற்றம் 2018 - 2019
# அக்டோபர் 04ம் திகதியன்று

குருபகவான் இப்போது வக்ரகதியில் இருக்கிறார். இன்னும் சில தினங்களில் வக்ர நிவர்த்தி அடைகிறார். துலாம் ராசியில் உள்ள குருபகவான் புரட்டாசி மாதம் 18ம் திகதியன்று (அக்டோபர் 04ம் திகதியன்று) விருச்சிக ராசிக்கு இடம் பெயர்கிறார். மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கும் பலன்கள், பரிகாரங்களைப் பார்க்கலாம்.

குரு இருக்கும் இடத்தை விட பார்க்கும் இடங்களே அதிக பலனடையும். குரு பகவான் தெய்வீக அறிவுக்கும் வேதாந்த ஞானத்திற்கும், செல்வ வளத்திற்கும் பொருள் சேமிப்பிற்கும் காரணகர்த்தா. குரு பகவான் மாபெரும் சாதனைகளைச் செய்ய வைத்து மனிதனை மாணிக்கமாக திகழ வைப்பார். நாட்டை ஆளவைப்பார், நல்லோருடன் சேர வைப்பார். புது புது உத்திகளைக் காண வைப்பார் ஆன்மிக சுகத்திற்கு காரகராகவும் திகழ்கிறார். இந்த குரு பெயர்ச்சி ரிஷபம், கடகம், துலாம், மகரம், மீனம் ஆகிய ராசிக்காரர்களுக்கு சாதகமான பலனை தருகிறது. இந்த குரு பெயர்ச்சி பலன்கள் பொதுவானதாகும். அவரவர்கள் ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்பிற்கு தக்கவாறும் தற்சமயம் நடைபெறும் தசா-புக்திக்கு தக்கவாறும் உள்ள பலன்களே நடைபெறும்.

## மேஷம்

செவ்வாய் பகவானின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் துடிப்பாகவும் மிகுந்த வீரத்துடன் செயல்படுவீர்கள். மற்றவர்களை பற்றி கவலைப்படாமல் எதிலும் முதலிடத்தை பிடிப்பது ஒன்றே உங்களின் தலையாய நோக்கமாகும். வீரமும் தைரியமும் கோபமும் ஆக்ரோஷமும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளவர்கள் நீங்கள். வீர தீரம் கொண்ட மேஷ ராசிக்காரர்களுக்கு உங்கள் ராசிக்கு 7ம் இடத்தில் சஞ்சாரம் செய்யும் குரு பகவான் அக்டோபர் மாதம் முதல் 8ம் இடத்திற்கு செல்கிறார். அஸ்டமத்தில் குரு அவ்வளவாக நல்லதில்லை. ஆனாலும் குரு பகவான் பார்வை ராசிக்கு 12ம் இடம்

2ம் இடம் மற்றும் 4ம் இடங்களின் மீது விழுவதால் பல நன்மைகள் நடக்கும். தனவரவு இருக்கும், சுக சந்தோஷங்கள் அதிகரிக்கும். சுப விரையங்கள் அதிகம் ஏற்படும். குடும்பத்தில் கணவன் மனைவிக்கு இடையே அவ்வப்போது பேச நேரம் ஒதுக்குங்கள் சண்டைகளை தவிர்க்கலாம். சாப்பாட்டு விசயத்தில் கவனமாக இருந்தால் வயிறு கோளாறுகளையும், நோய்களையும் தவிர்க்கலாம். வியாழக்கிழமை குருபகவானுக்கு அர்ச்சனை செய்யலாம்

**ரிஷபம்**

சுக்கிர பகவான் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் மிகவும் மென்மையானவர்களாகவும் மற்றவர்களை அனுசரித்து நடக்க கூடியவர்களாகவும், வசீகரப் பேச்சினால் பிறரை கவரக் கூடியவர்களாகவும் இருப்பீர்கள். நினைத்த காரியத்தை செம்மையாக முடிக்கும் ஆற்றல் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே. உங்கள் ராசிக்கு 6 ஆம் இடத்தில் இருக்கும் குருபகவான் ராசிக்கு 7வது வீட்டில் அமர்வது சிறப்பான அம்சம். கல்யாண வயதில் உள்ள ஆண் பெண்களுக்கு திருமணம் கை கூடி வரும் மேலும் நின்று போன திருமணங்கள் இனி சுபமாக நடைபெறும். திருமண வாழ்க்கையில் விவாகரத்து பெற்ற ஆண், பெண்களுக்கு மறுமணம் நடைபெறும். இது காதல் மலரக் கூடிய ஒரு காலம் ஆகும். காதல் உறவுகள் வலுப்படும். அதுவே திருமணத்தில் முடியக் கூடிய நல்ல நேரம் ஆகும். பொருளாதார உயர்வு இருக்கும், தீராத பிணிகளும் தீரும். நம்பிக்கையிழந்து வாழ்க்கையை ஓட்டியவர்களுக்கு எல்லாம் இனி எல்லாமும் சாத்தியம் தான் என்ற நம்பிக்கையை இந்த குரு பெயர்ச்சி கொடுக்கும்.

**மிதுனம்**

புதன் பகவான் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் புத்தி கூர்மையுள்ளவர்களாகவும்,சகிப்பு தன்மையும்,பொறுமையும் உடையவர்களாகவும் எல்லா காரியங்களையும் திறமையாக செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர்களாகவும் இருப்பீர்கள். உங்கள் ராசிக்கு களத்திரம் மற்றும் ஜீவன ஸ்தான அதிபதியான குரு ராசிக்கு 6வது வீட்டில் அமர இருக்கிறார். 6ம் இடம் சுப ஸ்தானம் இல்லை. குரு பகவான் 10,12 ஆம் இடம் மற்றும் 2 ஆம் இட தன ஸ்தானத்தை பார்வையிடுகிறார். பணம் அதிகமாக வந்தாலும் சுப விரைய செலவுகள்

ஏற்படும். திருமண வாய்ப்புகள் தாமதப்படும். தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமை விரதம் இருந்து வழிபட நன்மைகள் அதிகம் நடக்கும்.

**கடகம்**

சந்திரனின் ஆதிக்கம் பெற்றவர்கள் நீங்கள் உங்கள் ராசிநாதன் சந்திரன் பதினைந்து நாட்கள் வளர்பிறையாகவும், பதினைந்து நாட்கள் தேய்பிறையாகவும் உலவி வருவார். குருபகவான் இதுநாள் வரை உங்கள் ராசிக்கு 4வது வீட்டில் உள்ள குருபகவான் அக்டோபர் மாதம் முதல் 5வது வீட்டிற்கு செல்கிறார். குருபகவான் ராசியை பார்வையிடுகிறார். ராசிக்கு 9 ஆம் இடம், 11 வது இடத்தையும் பார்வையிடுகிறார் குருபகவான். காதல் கனியும் காலம், திருமண வாய்ப்புகளும் கைகூடி வரும். வியாழக்கிழமைகளில் மஞ்சள் நிற ஆடை அணிந்து குருபகவானை வழிபடலாம்.

**சிம்மம்**

சூரியனை ஆட்சி நாதனாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்களே உங்கள் ராசிக்கு 3வது வீட்டில் இருந்த குருபகவான் அக்டோபர் மாதம் முதல் ராசிக்கு 4வது வீட்டில் அமரப்போகிறார். குருபகவான் ராசிக்கு 8ஆம் இடம், 10ஆமிடம், 12வது இடத்தையும் பார்வையிடுகிறார். வீட்டில் சின்னச் சின்ன சண்டைகள் ஏற்படும். காதல், திருமண விசயங்களில் அவசரப்பட வேண்டாம். வேலைப்பளு அதிகரிக்கும். கடன் வாங்கவோ,கொடுக்கவோ வேண்டாம். தென்திசையில் எழுந்தருளும் குருபகவானை வணங்க நல்லதே நடக்கும். முக்கிய முடிவுகளை எடுக்கும் போது அவசரப்படாமல் ஆலோசனை செய்து முடிவு செய்யவும்.

**கன்னி**

புதன் பகவானை ஆட்சி நாதனாகக் கொண்ட புத்திசாலித்தனம் கொண்ட கன்னி ராசிக்காரர்களே. உங்கள் ராசிக்கு 2வது வீட்டில் தன ஸ்தானத்தில் அமர்ந்துள்ள குருபகவான், முயற்சி ஸ்தானமான மூன்றாவது வீட்டில் அமர உள்ளதால் சிறு சிறு பயணங்கள் ஏற்படும். வாக்கு ஸ்தானத்தில் அமர்ந்திருந்த குரு 3வது இடத்திற்கு செல்வதால் வார்த்தைகளில் கவனம் தேவை. குரு பகவான் ராசிக்கு 7வது வீடு, 9வது வீடு 11வது இடத்தை பார்வையிடுகிறார். இந்த குரு பெயர்ச்சியினால் வேலைப்பளு ஏற்பட்டாலும் நீண்ட நாள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும், கடன் தொகை வசூலாகும்.

**துலாம்**

அன்பு, காதல் உணர்வும் கொண்ட துலாம் ராசி நேயர்களே இது நாள் வரை உங்கள் ராசியில் இருந்த குரு பகவான் அக்டோபர் மாதம் முதல் உங்கள் ராசிக்கு 2வது வீடான தன ஸ்தானத்திற்கு செல்கிறார். குரு பகவான் ராசிக்கு 6வது இடம் 8வது இடம், 10வது இடத்தை பார்வையிடுகிறார். குரு பெயர்ச்சியினால் வீட்டில் அமைதி நிலவும், உல்லாச பயணம் செல்லக்கூடிய நேரம், சிலருக்கு பணி செய்யும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் தீரும், பதவி உயர்வுகள் கிடைக்கும். வியாழக்கிழமையன்று ஏழைகளுக்கு அன்னதானம் கொடுக்கலாம்.

**விருச்சிகம்**

செவ்வாயை அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே. இதுநாள் வரை உங்கள் ராசிக்கு விரைய ஸ்தானத்தில் இருந்த குருபகவான், அக்டோபர் மாதம் முதல் ராசிக்குள் வந்து அமர்கிறார்.

உங்கள் ராசிக்கு 5வது வீட்டிலும், 7வது வீட்டிலும், 9வது வீட்டிலும் குருவின் பார்வை விழுகிறது. பொறுப்புகளும், கடமை உணர்வுகளும் அதிகரிக்கும். பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் பலரும் அனுசரணையாக இருப்பார்கள். குரு பகவானை வியாழக்கிழமைகளில் சென்று வணங்கி வரலாம். குரு 5ம் பார்வையாக உங்கள் ராசிக்கு 5மிடத்தை பார்ப்பதால் திருமணமான தம்பதியினருக்கு புத்திர பாக்கியம் கிட்டும். உங்கள் குழந்தைகளின் மேல் படிப்பிற்காக செலவுகள் அதிகரிக்கும். தாய் வழியில் தன வரவு வரும். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். குரு 7ம் பார்வையாக உங்கள் ராசிக்கு 7மிடத்தை பார்ப்பதால் வியாபாரம், கூட்டு தொழில், நண்பர்கள் மூலம் நல்ல உறவு ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**தனுசு**

அறிவாற்றலும், திறமையும் கொண்ட தனுசு ராசிக்காரர்களே இதுநாள் வரை உங்கள் ராசிக்கு 11வது வீட்டில் லாப ஸ்தானத்தில் இருந்த குரு பகவான், ராசிக்கு 12வது வீட்டில் விரைய ஸ்தானத்தில் சஞ்சரிக்க உள்ளார். சுப விரைய செலவுகள் ஏற்படும். குரு பகவான் 4 ஆம் இடம் 6 ஆம் இடம் மற்றும் 8 ஆம் இடத்தை பார்க்கிறார். பண

வரவுக்கு பஞ்சமில்லை அதே போல சுப விரைய செலவுகளும் அதிகம் ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் வாக்கு வாதத்தில் ஈடுபட வேண்டாம். காதல் விவகாரங்கள் கை கூடுவதில்லை கொஞ்சம் ஒத்திப்போடவும். அவ்வப்போது உடல் களைப்பு ஏற்படும் என்பதால் சத்தான உணவுகளை சாப்பிடவும். உங்கள் ராசிக்கு 4 ம் வீடு பூமி வீடு,வாகனம் சுகம் கல்வி,தாய் ஆகிய ஸ்தானங்களை குரு பார்ப்பதால் அதன் அடிப்படையில் யோகங்கள் வரும். சகல காரியங்கள் சித்தி பெறும். உங்கள் ராசிக்கு 6ம் பாவத்தை குரு பார்ப்பாதால் கடன் சுமை குறையும்.நோய் நொடி நீங்கும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். வர வேண்டிய தொகைகள் வந்து சேரும். உங்கள் ராசிக்கு 8ம் பாவத்தை குரு பார்ப்பதால் வழக்கு வெற்றிகள் சாதகமாகும். பயம் நீங்கும்.எதிர்பாராத வகையில் பண வரவு வரும். காலங்கள் மாறும் காட்சிகள் மாறும். குருபகவானை சரணடைய நல்லதே நடக்கும்.

**மகரம்**

உங்கள் ராசிக்கு 10ம் பாவத்தில் சஞ்சாரம் செய்த குரு பகவான் இப்பொழுது உங்கள் ராசிக்கு 11ம் வீடான லாப ஸ்தானமான சிம்மத்தில் சஞ்சரிக்க உள்ளார். 11ம் பாவம் என்பது மூத்த சகோதரர்கள், வித்தை, லாபம், நட்பு, மன ஆசைகள் நிறைவேறுதல் ஆகியவற்றை குறிக்கும் இடமாகும். உங்கள் ராசிக்கு 11ம் பாவத்தில் குரு வரும் பொழுது முழுமையான யோகத்தைச் செய்யும் என்பது பழமையான ஜோதிட நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. உங்கள் ராசிக்கு 3ம் பாவத்தை குரு 5ம் பார்வையாக பார்ப்பதால் வீரம்,போகம் துணிவு துணைவர் பலம், ஆயுள்பலம், எல்லா காரியங்களிலும் வெற்றி பெற செய்வார். உங்களுடைய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். திட்டங்கள், ஆசைகள் கனவுகள் எல்லாம் நிறைவேறும். குழந்தைகள் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் கிட்டும். லாப ஸ்தானத்தில் உள்ள குருபகவானால் பதவி உயர்வு கிடைக்கும் ஆரோக்கியம் மேம்படும். உற்சாகம் அதிகரிக்கும்.

**கும்பம்**

ராசிக்கு 9ஆம் இடத்தில் சஞ்சாரம் செய்யும் குரு பகவான் 10 ஆம் இடத்திற்கு செல்கிறார். குரு பகவான் 2 ஆம் இடம் 4 ஆம் இடம்

மற்றும் 6 ஆம் இடத்தை பார்வை இடுகிறார். பத்தாமிடத்து குரு ஈசனார் ஒரு பத்திலே தலையோட்டிலே இரந்துண்டது என்பது பாடல்.

கடந்த காலத்தில் குரு 9ல் நல்ல இடத்திலிருந்து நன்மைகளை அடைந்தவர்கள் பத்தில் குரு கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்ற நிலையையும் உருவாகும். குரு பகவான் 5ம் பார்வையாக 2மிடமான வாக்கு வித்தை குடும்ப ஸ்தானத்தை பார்க்க போவதால் சொன்ன சொல்லை காப்பாற்றலாம். குடும்பத்தில் சந்தோஷங்களைப் பார்க்கலாம். குடும்ப தேவைக்காக புதிய பொருட்களை வாங்கலாம். எந்த காரியத்தையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்யுங்கள். பத்தில் உள்ள குரு பதவியை ஒன்றும் நாசம் செய்ய மாட்டார் கவலை பட வேண்டாம். நன்மையே நடக்கும்.

## மீனம்

இது வரை உங்கள் ராசிக்கு 8 இல் இருந்த குரு இப்பொழுது ராசிக்கு 9ம் இடத்திற்கு மாற இருக்கிறார். உங்கள் ராசி நாதனான குருவே உங்கள் ராசியை பார்க்கிறார். அது மிகவும் நல்லது. அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி, ஓடிப் போனவனுக்கு ஒன்பதில் குரு என்பார்கள். உங்கள் ராசி நாதன் குரு 5ம் பார்வையாக உங்கள் ராசியை பார்க்க போவதால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். உங்களுக்கு முன்னேற்றமும் வளர்ச்சியும் யோகமும் வந்து சேரும். குரு 7ம் பார்வையாக. ராசிக்கு 3 ம் இடத்தை பார்க்க போவதால் தைரியமாக எல்லா காரியங்களிலும் இறங்கி வெற்றி பெறலாம். தைரியத்தையும், தன்னம்பிக்கையும் கொண்ட வளமான வாழ்வு உண்டு.

ஊரொலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டினை கொண்டுபோய் சுட்டடிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே
நாளும் பொழுதும் நாமழுது என்னபயன்
கோளின் வினையால் பிரிந்த உயிர் மீளவும்
வாராது வாராதே வானுலகு கண்ட பின்னர் ...

# அந்தியேட்டி

இறந்து முப்பத்தோராம் நாள் செய்யப்படும் கிரியையாகும். இந்தக் கிரியை இரண்டு விதமாகச் செய்யப் பெறுகின்றது. அந்தியேட்டி கிரியை, வீட்டுக் கிரியை என்பன. அந்தியேட்டி (இது சாதாரண சைவர்கள்) பூதவுடலுக்கு பதிலாக வைக்கோல்லால் (தற்பை) சரீரம் போல செய்து அதற்கு இறுதிக் கிரியையின் போது பூதவுடலுக்கு செய்யப் பெற்ற எல்லாப் கிரியைகளும் செய்யப் பெற்று தகனம் செய்து அதன் அஸ்தி (தற்பையின் அஸ்தி) பெறப்படுகின்றது. இது புனர் தகனம் எனப்படும். பின் அங்கு பாசாணம் ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம் போன்றன செய்யப்படும். இங்கு முப்பத்தியொரு பிண்டங்கள் இடப்படும். இவற்றுள் தலைப் பகுதியில் வைக்கும் பிணடம் பெரிதாக இருக்கும். இந்த பிண்டங்கள் பச்சை அரிசிச் சாதம், கறிவகைகள், பலகாரங்கள், பழங்கள் எல்லாவற்றையும் சேர்த்து உருட்டி பிசைந்து இடவேண்டும். அதன் பின் ஏகோத்திர விருத்தி செய்யப்படும்.

நம் முன்னோர்கள் இப்பூசையை வசதி கருதியும், புனித ஸ்தலம் எனக் கருதியும் அனேகமாக எல்லோருமே கீரிமலையில் செய்வது வழக்கம். கீரிமலையில் இதற்கென பிரத்தியேக இடவசதியும், குருமாரும், புனிதமான சமுத்திரமும் இருப்பதனால் அங்கு சென்று செய்தனர். தற்பை சுட்ட அஸ்தியையும் (பாசாணத்தையும்), பிதுருகளுக்கு சமர்ப்பித்த பிண்டத்தையும், கும்பத்தையும் புனிதமான சமுத்திரத்தில் சங்கமிக்கச் செய்தல் புனிதம் நிறைந்ததென என கருதுகின்றனர். இக்கிரியைகளை சைவக்குருமாரே செய்வது வழக்கம்.வசதி படைத்தோர் தங்கள் வீடுகளிலோ, அல்லது ஊர் ஆலய வளாகத்திலோ மண்டபம் அமைத்து கிரியைகள் செய்தபின் பாசாணத்துக்கு தூப தீபம் காட்டி பூசை முடித்த பின் கும்பம், பாசாணம், பிண்டம் ஆகியவற்றை அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அல்லது தேர் போன்று ஒரு வாகனம் அமைத்து அதில் வைத்து மேளம் தாளம் முழங்க எடுத்துச் சென்று பிண்டத்தை ஒருவரும் அதன் பின் கும்பத்தை ஒருவரும், அதனைத் தொடர்ந்து பாசானத்தை ஒருவரும் கடற்கரைக்கு எடுத்துச் சென்று கடமை செய்தவர் இடையளவு தண்ணீரில் நின்ற வண்ணம் வடக்குப் பக்கம் பார்த்து நின்று முதலில் பிண்டத்தை தெற்கு பக்கமாகவும்,, பின் கும்பத்தை வடக்குப் பக்கமாகவும், பாசாணத்தை தலைக்கு மேலால் தெற்குப்

பக்கமாகவும் நீர்நிலையில் இட்டு ஸ்நானம் செய்வார்கள். அந்தியேட்டி கிரியைக்கு கடற்கரையே உகந்த இடமாகக் கருதப் பெறுகின்றது.

பின்னர் வீட்டு வாசலை அடைந்ததும் வேப்பிலையை சப்பி, நெருப்பு, சாணம், மண், வெண்கடுகு ஆகியவற்றை தொட்டு கல்லின் மேல் கால் வைத்து அல்லது உலக்கையை கடந்து செல்ல வேண்டும். சில இடங்களில் கடமை செய்தவர் வீட்டினுள் நுளையும் போது ஆராத்தியும் எடுப்பார்கள்.

**வீட்டுக்கிரியை அல்லது சபிண்டீகரணம்.**

வீடினை கழுவி சுத்தம் செய்து புண்ணியாகவாசனம் செய்த பின்னர் வீட்டுக்கிரியை செய்ய வேண்டும். விக்னேஸ்வர பூசை, புண்ணியாக வாசனம், பஞ்ச கவ்விய பூசை முதலிய கிரியைகளை செய்து நவசிராத்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை,இடபதானம், ஏகோதிட்டம், மாசிகங்கள், சோத கும்ப சிராத்தம், சபிண்டீகரணம் செய்வதே ஒழுங்குமுறை.

இக்கிரியை பொதுவாக பிராமணக் குருமார் மூலம் செய்யப் பெறுகின்றது. சில இடங்களில் சைவக்குருமாரே இதனையும் செய்கின்றனர், காரணம் பிதிர்த்தற்பணம் இறுதிக்கிரியைகள் செய்தவருக்கே உரியன எனக் காரணம் கூறப்படுகின்றது. இறந்தவருக்காக வழங்கப் பெறும் தர்ப்பணம் (உடை, குடை, செருப்பு, தானம் முதலியன) இறந்தவருக்காக கிரியைகள் செய்த தமக்கே வழங்கப் பெறவேண்டும் என்பது சைவக் குருமாரின் வாதமாகும்.

வீட்டுக்கிரியையின் போது இரண்டு பிராமணக்குருமார்கள் வருவார்கள். அதில் சிரேஷ்ட குரு கிரியைகளைச் செய்வார், மற்றய குரு தானங்களைப் பெற்றுச் செல்வார் முதலிலேயே சென்றுவிடுவார். அவர்செல்லும் போது வீட்டைத் திரும்பிப் பார்க்ககூடாது. அத்துடன் அவர் செல்லும் போது அவரின் பின்னால் சாணம் கரைத்த தண்ணீர் அல்லது மஞ்சள் நீர் தெளித்து புனிதமாக்குவார்கள். காரணம் அவர் அங்கே பிதிராக தோற்றமளிக்கின்றார். அதன் பின்னர் சிரே'ட குரு பூசைகளை நிறைவு செய்து, அங்கு இருப்போரை ஆசீர்வதித்து விடைபெற்றுச் செல்வார். அவர் முற்றத்தில் நிற்க அவரைச் சுற்றி வந்து வீழ்ந்து வணங்குவார்கள். அவர் வீட்டில் உள்ளவர்களை ஆசீர்வதித்த பின் விடை பெற்றுச் செல்வார். அவர் இங்கே இறைவனாக மதிக்கப் பெறுகின்றார்.

# மனிதனுக்கு கிடைத்த ஆயுள்

எல்லா உயிரினங்களுக்கும் வாழ்நாளை எவ்வளவு காலம் வைக்கலாம், என்று சிந்தித்தார் கடவுள். எல்லாவற்றிற்கும் சமமாக முப்பது ஆண்டுகள் என்று முடிவு செய்தார் அவர். தன் இருப்பிடத்திற்கு எல்லா உயிரினங்களும் வரச் செய்தார். அவற்றைப் பார்த்து, உங்கள் ஒவ்வொருவருக்கும் முப்பது ஆண்டு ஆயுள் தருகிறேன். இந்த வாழ்நாள் போதும் என்பவர்கள் இங்கிருந்து சென்று விடலாம். குறை உடையவர்கள் இங்கேயே இருங்கள். தீர விசாரித்து அவர்கள் குறையைத் தீர்த்து வைக்கிறேன், என்றார் அவர். கழுதை, குரங்கு, நாய், மனிதன் ஆகிய நால்வர் மட்டுமே அங்கே இருந்தனர். மற்ற எல்லோரும் அங்கிருந்து மகிழ்ச்சியுடன் புறப்பட்டனர்.

முதலாவதாக நின்றிருந்த கழுதையை அழைத்தார் கடவுள். உன் குறை என்ன? என்று கேட்டார்.

கடவுளே! என் நிலையைப் பாருங்கள். நான் நாள்தோறும் ஏராளமானசுமைகளைச் சுமந்து துன்பப் படுகிறேன். ஓய்வோ தூக்கமோ எனக்குக் கிடைப்பது இல்லை. எப்பொழுதும் பசியால் துன்பப் படுகிறேன். முதுகில் சுமையுடன் வரும் நான், தெருவோரம் முளைத்து உள்ள புற்களில் வாயை வைத்து விடுவேன். என்னை அடித்துத் துன்புறுத்துவார் என் முதலாளி. மகிழ்ச்சி இல்லை. என் வாழ்க்கையே நரகம். இந்தக் கொடுமைகளை எல்லாம் என்னால் எப்படி முப்பது ஆண்டுகள் தாங்கிக் கொள்ள முடியும்? என் மீது கருணை கொண்டு என் ஆயுளைக் குறைத்து விடுங்கள், என்று கெஞ்சியது.

சரி! பன்னிரண்டு ஆண்டுகள் குறைத்து விடுகிறேன். இனி உன் வாழ்நாள் பதினெட்டு ஆண்டுகள் தான், என்றார் கடவுள். எதைக் கேட்ட கழுதை மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டது. அடுத்ததாக இருந்த நாயை அழைத்தார் கடவுள் உன் குறை என்ன? என்று கேட்டார். கடவுளே நான் வலிமையுடன் நன்றாக மோப்பம் பிடிக்கும் திறமையுடனும் இருக்க வேண்டும். என் காதுகள் துல்லியமான சிறு ஓசையைக் கூடக் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் எனக்கு மதிப்பு. நான் முதுமையடைந்து தளர்ந்து விட்டால் எல்லோருமே என்னை வெறுக்கின்றனர். எனக்கு உணவும் கிடைப்பதில்லை, என்றது நாய்

உனக்கு நான் தந்திருக்கும் வாழ்நாள் மிக அதிகம் என்று கருதுகிறாய். குறைத்து விடுகிறேன். இனி உன் வாழ்நாள் பன்னிரெண்டு ஆண்டுகள் தான், என்றார் கடவுள். மகிழ்ச்சி அடைந்த நாயும் கடவுளை வணங்கிவிட்டுப் புறப்பட்டது. குரங்கு கடவுளின் முன் குதித்து வந்து நின்றது. உனக்கு என்ன குறை? என்று கேட்டார், கடவுள். பல்லைக் காட்டியக் குரங்கு, கடவுளே! முப்பது ஆண்டுகள் என்பது நீண்ட காலம் ஆயிற்றே. அவ்வளவு காலமா நாங்கள் கொடுமையை அனுபவிக்க வேண்டும்? உணவுக்காக நாங்கள் மனிதர்களிடம் பல்லைக் காட்டுகிறோம். நாட்டியம் ஆடுகிறோம். என்னென்னவோ செய்கிறோம். இருந்தாலும் எங்களுக்குக் கிடைப்பவை அழுகிப்போன பழங்கள் தான். முதுமை அடைந்து விட்டால் எங்களால் கிளைக்குக் கிளை தாவ முடியாது. அப்பொழுது எங்கள் நிலை மிகப் பரிதாபமாக ஆகி விடும். எங்களால் எந்தச் செயலும் செய்ய முடியாது. ஆகவே எங்கள் ஆயுளைக் குறையுங்கள், என்று வேண்டியது. இனி உங்களுக்குப் பத்து ஆண்டுகள் தான் வாழ்நாள், என்றார் கடவுள். குரங்கும் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டது. கடைசியாக இருந்த மனிதனை அழைத்தார் கடவுள். உன் குறை என்ன? உனக்கு எவ்வளவு ஆயுளைக் குறைக்க வேண்டும்? என்று கேட்டார்.

கடவுளே! முப்பது ஆண்டுகள் என்பது எங்களுக்கு மிகக் குறைந்த ஆயுள் ஆகும். அப்பொழுது தான் நாங்கள் ஏதேனும் ஒரு கலையை முழுமையாகக் கற்றிருப்போம். நாங்கள் குடியிருப்பதற்காக ஒரு வீட்டைக் கட்டி முடித்திருப்போம். எல்லாக் கடமைகளையும் முடித்துவிட்டு மகிழ்ச்சியாக நாங்கள் இருக்கத் தொடங்கும் காலம் அது.

நாங்கள் இதுவரை உழைத்த உழைப்பிற்குப் பயன் நுகரும் பருவம் அது. இந்தச் சூழலில் எங்கள் உயிரைப் பறிப்பது கொடுமை ஆகும். முப்பது ஆண்டு வாழ்நாள் என்பது எங்களுக்குப் போதவே போதாது. எங்களுக்கு அதிக ஆயுள் வேண்டும், என்று வேண்டினான் அவன். இங்கு வந்த நீ குறையுடன் சொல்லக் கூடாது. கழுதையிடம் பெற்ற பன்னிரெண்டு ஆண்டுகள், நாயிடம் பெற்ற பதினெட்டு ஆண்டுகள், குரங்களிடம் பெற்ற இருபது ஆண்டுகள் இங்கே உள்ளன. அந்த ஐம்பது ஆண்டுகளையும் நீ கூடுதலாகப் பெற்றுக் கொள்ளலாம். இனி உன் வாழ்நாள் எண்பது ஆண்டுகள். உனக்கு மகிழ்ச்சிதானே,

என்று கேட்டார் கடவுள். மகிழ்ச்சிதான் என்ற அவன் கடவுளை வணங்கி விட்டுப் புறப்பட்டான். எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதை அறிந்தார் கடவுள். கூடுதல் ஆயுள் கேட்டுப் பெற்ற மனிதனின் நிலைக்காக அவர் வருத்தப்பட்டார். கடவுளிடம் வரம் பெற்ற நாளிலிருந்து மனிதன் எண்பது ஆண்டுகள் வாழத் தொடங்கினான். முதல் முப்பது ஆண்டுகளை அவன் மகிழ்ச்சியாகக் கழித்தான். இந்த காலத்தில் தான் அவன் அறிவுள்ளவனாக, வீரனாக, பயனுள்ளவனாக வாழ்ந்தான். ஏனென்றால் கடவுள் அவனுக்கே கொடுத்த ஆயுள் இது. அடுத்த பன்னிரெண்டு ஆண்டுகள் கழுதையின் ஆயுள். அதனால் அவன் இந்தக் காலத்தில் கழுதையைப் போலப் பிறர் சுமைகளைத் தூக்கினான். சூழ்நிலையால் அடிபட்டுப் பசியாலும் பட்டினியாலும் வாடினான். நாற்பத்து இரண்டிலிருந்து அறுபது வரை நாயின் ஆயுள் அவனுடையது. இந்தக் காலத்தில் அவன், தான் சேர்த்த பொருள்களைக் காவல் காக்கும் நாய் போல வாழ்ந்தான். பிறர் அதைக் கைப்பற்ற வந்தால் குரைத்து வாழ்க்கை நடத்தினான். அறுபதிலிருந்து அவன் வாழ்க்கை குரங்கு வாழ்க்கைதான். தன் பேரக் குழந்தைகளிடம் குரங்கைப் போலப் பல்லைக் காட்ட வேண்டியதாயிற்று. கிளைக்குக் கிளை தாவும் குரங்கு போல அவன் மகன் வீடு, மகள் வீடு என்று மாறி மாறிச் செல்ல வேண்டியதாயிற்று. அவனும் பல்லெல்லாம் விழுந்து கன்னம் ஒட்டிக் குரங்கைப் போலக் காட்சி அளித்துப் பிறகு இறந்தான்.

வாழ நினைக்கும் போது
வாழ்க்கை புரிவதில்லை...
வாழ்க்கை புரியும் போது
வாழ முடிவதில்லை...
உன்னுடைய என்றாலும்
உரிமை கிடைப்பதில்லை...
உரிமை கிடைத்தாலும்
உடைமை ஆவதில்லை...
எல்லாம் கிடைத்த பின்பு
எதிலும் பற்று இல்லை...
உயிர் பிரியும் நேரத்தில்
உதித்த ஞானமிது.....

# பூர்வபுண்ணிய வலிமை

நம் நாட்டில் பழமையான ஆலயங்கள் பல இருக்கின்றன இதில் சரிபாதி சிவாலயங்களாக இருக்கின்றன

ஒவ்வொருவருமே பேச்சு, மூச்சு, சிந்தனை முழுவதும் எப்படியெல்லாம் பணம் சம்பாதிப்பது? என்ற நோக்கத்தின்படியே செயல்படத் துவங்கிவிட்டனர் அதன் விளைவு?

நமது எதிர்கால சந்ததியினருக்கு நமது பண்பாடு பற்றிய அடிப்படை ஞானம் கிடைக்காமல் போய்க்கொண்டிருக்கிறது இணையமும், கணினிபற்றிய அடிப்படை ஞானம் இல்லாதவர்களை பார்த்து கற்காலத்தைச் சேர்ந்தவரைப் போல எண்ணத் துவங்கிவிட்டனர். அப்பா 40 வருடம் அரசுப்பணி புரிந்து தனது 58 வயதில் பெற்ற சம்பளத்தை அவரது மகன்/ள் 21 வயதில் பெறத் துவங்கினான்/ள்.

சிறு சிறு நகரங்களும் செல்வச் செழிப்பைப் பெறத் துவங்கின ஆனால்,அதே சமயம் செல்வ வளம் மிக்கவர்களுக்கும், வறியவர்களுக்குமான இடைவெளி அதிகரிக்கத் துவங்கியது ஜனநாயக நாடான நமது நாடு முதலாளித்துவ வடிவம் எடுக்கத் துவங்கியது அன்பு, பாசம், விட்டுகொடுத்தல், குடும்ப ஒற்றுமைக்கு தன்னையே தியாகம் செய்தல், குழந்தைகளோடு நேரம் செலழித்து அவர்களின் ஆளுமைத் திறனை வளர்த்தல், அவர்களின் சிந்திக்கும் திறனை வளர்த்தல், அவர்களது நட்பு வட்டத்தைக் கண்காணித்தல் போன்றவை குறையத் துவங்கின அவர்களது மனம் சார்ந்த சிக்கல்களை காது கொடுத்து கேட்க பெற்றோர்களுக்கே நேரம் இல்லை ஆனால், ஓடி ஓடி சம்பாதிப்பது, அவர்களுக்காகவே!!!

முதுமைக் காலத்தில் தன்னையும், குடும்ப அமைப்பையும் நிர்வகிக்கும் விதமாக அவர்களுக்குப் பயிற்றுவிக்க நேரம் இல்லாமல் போய்விட்டது. இதற்கு முதல் காரணம் நமது முன்னோர்கள் நடைமுறைப்படுத்திய பாரம்பரிய நடைமுறைகளை இறுதிவரையிலும் பின்பற்றாததே காரணம் ஏழு வயதிற்குள் நமது குழந்தைகளை அடிக்கடி பழமையான ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லாவிட்டால், அதன்பிறகு அவர்களுக்கு பக்தி உணர்வை ஊட்டுவது முடியாத

காரியமாகிவிடுகிறது.

பெற்றோர், குரு, குழந்தைகள், இறைவன் இவர்களில் யாராவது ஒருவரை சந்திக்கச் சென்றாலும் வெறும் கையோடு போய் பார்க்கக் கூடாது என்பது நமது இந்து தர்மத்தின் சம்பிரதாயம்,

பெரும்பாலான சிவாலயங்களுக்குள் பசுமடம் அமைக்கப் பட்டிருக்கிறது எனவே, வாழைப்பழங்கள் அல்லது அகத்திக்கீரை வாங்கிச் செல்வது அவசியம் ஆண்கள் எனில், மேலாடையைத் தவிர்த்து விட்டு, சிவாலயத்தினுள் நுழைவது அவசியம், ஒவ்வொரு நாளுமே மஞ்சள் நிற வேட்டியை அணிந்து கொண்டு செல்வது நன்று.

கோவில் வாசலில் துவார (வாசல்) பாலகராக விநாயகர் அருள்பாலித்துக் கொண்டு இருப்பார், அவரை மனப்பூர்வமாக வழிபட்டுவிட்டு, கோவிலினுள் நுழைவது முறை, விநாயகரை வழிபடும் போது, மனதினுள் அவரது காயத்ரி மந்திரத்தையோ அல்லது அகவலையோ மனதிற்குள் பாடுவது அவசியம்

"ஓம் ஏக தத் புருஷாய வித்மஹே
வக்ர துண்டாய தீமஹி
தந்நோஹ் தந்தி ப்ரதோசதயாத்"
என்பது விநாயகர் காயத்ரி மந்திரம் ஆகும்.
"ஓம் ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை
இந்து இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"
என்பது விநாயகர் அகவல் ஆகும்.

இதுவும் மந்திரிக்க இயலாதவர்கள் ஓம் கணபதியே போற்றி என்று ஒன்பது முறை மந்திரித்தாலும் போதுமானது.

கோவிலின் கோபுரத்திற்கு நேர் கீழாக வரும் போது, அங்கிருந்து மூலவரின் உருவம் தெரியும், அந்த கணத்தில் ஓம்சிவசக்திஓம் என்ற மந்திரத்தை பனிரெண்டுமுறை மந்திரித்துவிட்டு, கொடிமரத்தின் அருகில் வரவேண்டும் கொடி மரத்துக்கு அருகில் இருக்கும் பலிபீடத்தை வந்தடைய வேண்டும். அங்கே வடக்கு நோக்கி விழுந்து கும்பிட

வேண்டும். இப்படிச் செய்வதால் நம்மிடம் இதுவரை இருந்து வந்த அனைத்து தீய எண்ணங்களையும் அந்த பலிபீடத்தில் பலியிடுவதாக ஐதீகம். பலிபீடத்தில் விழுந்து வணங்கிய பின்னர், ஒருபோதும் கோவிலுக்குள்ளே எந்த இடத்திலும் விழுந்து வணங்கக் கூடாது மேலும், சிவாலயத்தினுள் இறைவனைத்தவிர, வேறு எவரையும் வணங்கக் கூடாது. அனாவசியமான பேச்சு, செல்போன் பேச்சு கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

சிவனை வழிபடுவதற்கு முறைப்படி நந்திபகவானிடம் அனுமதி கோர வேண்டும். நந்தி பகவானை வழிபடுவதன் மூலமாக இந்த அனுமதி நமக்கு கிடைத்துவிட்டதாக அர்த்தம்

"ஓம் ஏகதத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தந்நோஹ் நந்தி ப்ரசோதயாத்"

என்பது நந்திபகவானின் காயத்ரி மந்திரம் ஆகும் பிறகு, மூலவராக இருக்கும் சிவனது இருப்பிடத்திற்குள் செல்ல வேண்டும். ஏதாவது ஒரே ஒரு கோரிக்கையை மட்டுமே நினைக்க வேண்டும். நினைத்துவிட்டு"ஓம்சிவசக்திஓம்,ஓம்சிவசக்திஓம் என்ற சிவமந்திரத்தை இங்கிருந்து மந்திரிக்கத் துவங்க வேண்டும். சிவனை வழிபட்டு விட்டு, பக்கவாட்டு வாசல் வழியாகவே அம்பாள் சன்னதிக்குச் செல்ல வேண்டும்.

இதே போல, அம்மன் சன்னதியில் அமைக்கப்பட்டிருக்கும் நந்திபகவானை வழிபட்ட பின்னரே, அம்மனை தரிசிக்கச் செல்ல வேண்டும். இங்கேயும் மனதிற்குள் ஓம்சிவசக்திஓம், ஓம்சிவசக்திஓம் என்று தொடர்ந்துமந்திரித்துக் கொண்டே நமது கோரிக்கையை வேண்டுதல் வேண்டும். சிவனிடம் என்ன கோரிக்கையை வேண்டினோமோ, அதே கோரிக்கையை அம்பாளிடமும் வேண்டுதல் வேண்டும்.

சிவன் சன்னதியில் தரப்படும் விபூதியையும், அம்பாள் சன்னதியில் தரப்படும் குங்குமத்தையும் பத்திரமாக நமது வீட்டிற்குக் கொண்டு வர வேண்டும். பலர் "சிவன் சொத்து குல நாசம்" என்ற பழமொழியைத் தவறாகப் புரிந்து கொண்டு, அர்ச்சகர்/சிவாச்சாரியார்

கொடுக்கும் விபூதி, குங்குமத்தை அங்கேயே கொட்டிவிட்டு வந்து விடுகின்றனர், இது தவறு மட்டுமல்ல, மகத்தான பாவமும் கூட!!!


பழமையான சிவாலயத்தில் தரப்படும் விபூதி, குங்குமத்தை வீட்டுக்குக் கொண்டு வந்து சேமித்துக் கொண்டே இருந்தால், நமக்கும், நமது குடும்பத்தாருக்கும் யாராலும் எந்த ஒரு மறைமுகத்தீங்கையும் செய்யமுடியாது. (நிரந்தரமாக அசைவம் சாப்பிடுவதை நிறுத்தியிருந்தால்!) ஏனெனில், இவைகளில் அளவற்ற தெய்வீக சக்தியும், அதிஉயர் பலமும் நலமும் இருப்பதை இன்றைய நவீன அதீத உளவியில் விஞ்ஞானம் பலமுறை நிரூபித்திருக்கிறது.

*தொகுப்பு : தேவர்sun*

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
"அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்" எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
"அனுபவம் என்பதே நான்தான்" என்றான்!

**- கண்ணதாசன் -**

# அமரர் மகாதேவா அவர்களின் வம்ச விருட்சம்




நினைவுமலர் அமைப்பு : பாஸ்கரன் - தேவா

43
31

43
31
---
43
129
---
1333

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றவருடையதாகிறது,
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்."

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



மெகா பதிப்பகம்
தொ.பே : 021 221 7939